புது [illegible]ப்படி

பிரதம பாடசாலைகளின்

மூன்றாவது வகுப்புக்கு

ஏற்படுத்திய

# பூகோள சாஸ்திரம்.

இஃது

உபாத்தியாயர்களின் கஷ்டத்தை நீக்கும் பொருட்டும்,

மாணாக்கர்களின் உபயோகத்துக்காகவும்

ஆம்பூர் போர்டு பிரைமெரி

பாடசாலையின் ஸெகெண்ட் மாஸ்டர்

வெள்ளம்பி· குப்புசாமி ஐயரவர்களால

இயற்றப்பட்டது.

முதற்பதிப்பு.—1000.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1896

ரிஜிஸ்தர் காபிரைட்.

இதன் விலை அணா 1.

## மூன்றாவது வகுப்பிற்கு வேண்டிய முக்கியமான விஷயங்கள்.

---

1. சூரியன், சந்திரன், பூமி இவைகளின் சம்பந்தங்களைப்பற்றி. 8 மார்க்கு.

2. பூமியினுடைய உருவம், பரிமாணம், நிலம் நீர்சம்பந்தமான பெயர்களைப் படத்தின் மூலமாய் விளக்கிக் காட்டுதல். 6 மார்க்கு.

3. பாடசாலை யிருக்கிற பட்டணம் அல்லது கிராமத்தை அதன் படமூலமாய் விவரித்தல். 10 மார்க்கு.

4. பாடசாலையிருக்கும் ஜில்லாப்படத்தின் விபரங்கள். 6 மார்க்கு.

உபாத்தியாயர் தான் டிரெயினிங் பாடசாலையில் கற்றவண்ணம், பாடசாலையிருக்கும் ஊர் படம் ஒன்று வரைந்து, அதைப் பாடசாலையில் சுவரில் தொங்க விடவேண்டும்.

## மூன்றுவது வகுப்பு

# பூகோள சாஸ்திரம்.

பூமியையும் அதிலுள்ள வற்றையும் பற்றிச் சொல்லும் நூலுக்கு, பூகோள சாஸ்திரம் என்று பெயர். பூமி கிச்சிலிப் பழம்போல் உருண்டை வடிவுள்ளது.

### திருஷ்டாந்தமாக.

(1) சமுத்திரக் கரையில் நின்று பார்த்தால் எதிரே வரும் கப்பலின் நுனிப்பாய் மாத்திரம் காணப்படும். வரவரப் பாய்முழுவதும் தோன்றும். கடைசியில் கப்பலின் உரு முற்றும் காணப்படும். இதனால் பூமி உருண்டையே யொழிய தட்டையல்ல.

(2) ஒரு எறும்பு ஒரு கிச்சிலிப் பழத்தைச் சுற்றி வருவதுபோல் சமுத்திரத்தில் ஓரிடத்தி னின்று மற்றோ ரிடத்திற்கு கீழ்த்திசையாக வாவது மேற்றிசையாகவாவது நேராகக் கப்பல் யாத்திரை செய்தவர்கள் திரும்பவும் தாங்கள் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்திருக்கிறார்கள். இதனால் பூமி தட்டை யல்ல. உருண்டை வடிவமானதென்று அறியலாம்.

பூமியின் விட்டளவு 7,912 மைல். அதன் சுற்றளவு 24,856 மைல்.

### பூமியின் அசைவு.

பூமி சந்திரனைப் போல் அந்தரத்தில் அசைவாடிக் கொண் டிருக்கிறது. பூமி தன்னைத்தான் சுற்றுவதற்கு ஒரு பகலும் இரவுமாகிய 24 மணி நேரம் செல்லு

கிறது. இதைத் தினகதியென்று சொல்வார்கள். பூமி சூரியனைச் சுற்றிவர 365 நாளும், 6 மணி நேரமும் செல்லும். இதை வருஷகதியென்று சொல்வார்கள். இத னுல் பருவகாலங்கள் உண்டாகின்றன. பூமி சூரியனிட மிருந்து ஒளிபெறுகிறது. சூரிய வெளிச்சமும் உஷ்ணமு மில்லாவிடில் மரம், செடி, புல், பூண்டுகள் செழித்து ஓங்கா. இதற்குத் திருஷ்டாந்தமாக இருட்டில் வளரு கிற செடி செழித்து வளராமல் வெளிறின நிறமுடை யதா யிருக்கும். வெளிச்சத்தில் வளரும்செடி செழித்து விருத்தி யடைகிறது. சூரியவொளி இல்லாவிடில் ஜீவ ராசிகள் நசித்துப்போம். சூரியனுக்கும் பூமிக்கும் உள்ளதூரம் 9,20,00,000 மைல். அதன் சுற்றளவு 28,00,000 மைல். சூரியன் பூமியைப்போல் 13 இலட்ச மடங்குள்ளது. பூமிக்குச் சூரியன் வெகு தூரத்தி லிருப்பதால், அது நமது கண்ணுக்கு மிகச் சிறியதா கத் தோன்றுகிறது. பூமியினிடமிருந்து சூரியனைச் சேர ஒரு பாதையிருந்து, இரவும்பகலும் இடைவிடாது செல் லத்தக்க ஒரு குதிரை யிருந்தால், சூரியனைச்சேர 700 வருஷம் செல்லும். சூரியன் தன்னைத்தான் சுற்றிவர 25 நாள் செல்லும். பூமி ஜூன்மாதத்தி லிருப்பதைவிட டிசம்பர் மாதத்தில் சூரியனுக்கு 3 லட்ச மைல் அருகா மையி லிருக்கிறது.

## கிரகங்கள்.

சூரியனைச்சுற்றி யோடும் அண்டங்களுக்குக் கிரகங்க ளென்று பெயர். அவை பிரதான கிரகங்க ளெனவும், உப கிரகங்க ளெனவும் பாகிக்கப்பட் டிருக்கின்றன. சூரியனைச்சுற்றி யோடுபவை பிரதான கிரகங்களெனப் படும். பிரதானகிரகங்களைத் தொடர்ந்து அவைகளோடு கூடச் சூரியனைச் சுற்றி வருபவை உப கிரகங்க ளென

வும்படும். பிரதான கிரகங்கள் 8. அவையாவன:- புதன், சுக்கிரன், பூமி, அங்காரகன், பிரகஸ்பதி, சனி, யூரேனஸ், நெப்தியூன். இவைகளில் சூரியனுக்கு அதிக சமீபத்தி லிருப்பது புதன், அதிக தூரத்தி லிருப்பது நெப்தியூன்.

## சந்திரன்.

பூமிக்கோர் உபகிரகம் உண்டு. அதுதான் சந்திரன். அது பூமிக்கு 2,40,000 மைல் தூரத்தி லிருக்கிறது. மணி ஒன்றுக்கு 30 மயில் ஓடுகிற ரயில் பதினொரு மாசத்திலும், அதிவேகமாய் ஓடுகிற குதிரை இரண்டு வருஷத்திலும் சந்திரனைச் சேரும். சந்திரனுடைய குறுக்களவு 2,160 மைல். 50 சந்திரன் கொண்டது ஒரு பூமி.

சந்திரன் சூரியனிடமிருந்து ஒளி பெறுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றிவர 28 நாள் செல்லும். பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் சந்திர னிருக்கையில் அதின் இருண்டபாகம் நமக் கெதிரே தெரியும். சந்திரன் கண்ணுக்குத் தோன்றாது. அப்பொழுது அமாவாசியை என்கிறோம். சந்திரனுக்கும் சூரியனுக்கு மிடையில் நாம் வரும்போது வெளிச்ச பக்க முழுவதும் நமக்கெதிரே தெரியும். அப்பொழுது பௌரணமி என்கிறோம்.

(1) சந்திரனது முதலில் தன்னையே ஒரு பம்பரம்போல் சுற்றுகிறது. (2) பிறகு பூமியைச் சுற்றி மாதத்திற்கு ஒருவாறு வருவது. (3) கடைசியில் பூமியோடுகூட வருஷத்திற்கு ஒரு முறை சூரியனைச் சுற்றுவ தென்பவைகள் தாம்.

இதனால் சந்திரனுக்கு 3 வித அசைவுகள் உண்டெனத் தெரிகிறது. பூமியி லிருப்பது போலச் சந்திர

ளிலும் நிலம், நீர் முதலிய பாகங்க ளிருக்கின்றன. மலை களும், பள்ளத் தாக்குகளும், மஹா சமுத்திரங்களும் உண்டு. ஆனால் அச் சமுத்திர ஜலம் கற்பாறையாக உறைந்துபோ யிருக்கிறது. அது பொறுக்க முடியாத சீதளவிட மாதலால் அவ்விடத்தில் ஜீவப் பிராணிகள் இராவெனத் தெரிகிறது. தூர திருஷ்டிக் கண்ணாடியை வைத்துப் பார்த்தால் சந்திரனிடத்தி லிருக்கும் மலைக ளும், பள்ளத் தாக்குகளும் நமக்குப் புலப்படும்.

## இராப்பகல் உண்டாகும் விதம்.

(1) பூமியானது மேற்கே யிருந்து கிழக்கே உரு ளுகிறது. (2) தன்னைத்தானே ஒருதரம் சுற்ற 24 மணி நேரம் செல்லும். (3) பூமி, கிரகங்களி லொன்று. அது தன்னைத்தானே சுற்றுவது மல்லாமல் சூரியனை வருஷ த்திற் கொருதரம் சுற்றுகிறது. இதனால் பூமிக்கு இரு வித அசைவுகள் உண்டெனத் தெரிகிறது. (4) சூரியன் இதர கிரகங்களுக்கு மத்தியிலிருந்துகொண்டு அக்கிரகங் களுக்கு வெளிச்சத்தைத் தருகிறது. (5) பூமி அசைகிற தேயல்லாமல் சூரியன் அசைகிறதேயில்லை. (6) நாம் சூரி யனைக் காலையில் கிழக்கில் காணும்படி நம்மை அதன் பக்கமாகப் பூமியானது திருப்புகிறது. (7) நாம் சூரியனு க்கு நேரே வரும்போது, உச்சியில் சூரியன் வந்துவிடு வது போலும், பிறகு நாம் சூரியனைவிட்டு விலக விலக மேற்கே இறங்கி அஸ்தமித்து விடுவதுபோலும் காணப் படுகிறது. (8) நமக்குப் பகல் நேரமா யிருக்கும்போது, குடகோளார்த்தத்தில் இரவும், குடகோளார்த்தத்தில் பகலா யிருக்கும்போது குணகோளார்த்தத்தில் இர வாயு மிருக்கும். (9) மேற்குறித்த காரணங்களினாலேயே வடக்கு அக்ஷ பாகங்களிலும், தெற்கு அக்ஷ பாகங்களி

லும், சிலமாதம் சூரியன் அஸ்தமிக்காமலும் சில மாதம் உதிக்காமலு மிருக்கிறது.

## சூரிய கிரகணம்.

சந்திரனானது சூரியனுக்கும் பூமிக்கு மிடையில் வந்து, சூரியனைப் பார்க்கக் கூடாதபடி மறைக்கும் போது, சூரியகிரகணம் உண்டாகிறது. சூரியன், சந்திரன், பூமி ஒரே நேர்க்கோட்டி லிருக்கும்போது, சந்திரனுடைய சாயை,பூமியின்பேரில் பட்டுச் சூரியனுடைய வெளிச்சம் மறைவுபட்டுப் போகிறது. அப்போதுதான் சூரிய கிரகணம் என்னப்படும். சூரிய கிரகணம் அமாவாசையிலேதான் உண்டாகும். ஆனால் பிரதி அமாவாசையிலும் உண்டாகாது. சந்திரனுடைய சாயை பூமி முழுமையும் மறைக்கத்தக்க அவ்வளவு பெரிதல்லவாகையால், சூரிய கிரகணம் சில பாகங்களுக்கு மாத்திரந்தான் தெரியும்.

## சந்திர கிரகணம்.

பூமி ஒரு இருண்ட வஸ்து. அது சூரியனுடைய ஒளியால் பிரகாசம் அடைகிறது. சூரியன் பூமியைவிட் அநேக மடங்கு பெரிதாகையால்,சூரியனது ஒளியினின் றும் மறைந்திருக்கிற பக்கத்தில் பூமியின் சாயை குவிந்து சக்கரை பொட்டணம போல், ஒரு முனையாக முடிய வேண்டி யிருக்கிறது. இந் நிழலின் வழியாய்ச் சந்திரனனது செல்லும்போது, சூரியனுடைய வெளிச்சம் தடைபட்டுப்போய் இருண்டு போகிறது. சூரியன், பூமி, சந்திரன் இம்மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் அமையும்போதெல்லாம் சந்திர கிரகணம் உண்டாகும். சந்திர கிரகணம் பௌரணிமியிலேயே உண்டாகும்.

சந்திர பிம்பமானது பூமியின் நிழலில் மறைந்துபோகும் அளவிற்குத்தக்கபடி பூரண கிரகணமென்றும், முக்கால், அரை, கால் கிரகணமென்றும் சொல்லுவார்கள். சந்திரன் தென்படும் பக்கங்களிலெல்லாம் கிரகணமாகவே தோன்றும்.

## நீர்நிலப் பிரிவுகளைக் குறித்து.

பூமியின் சுற்றளவு 25,000 மைலாதலால் நாள் ஒன்றிற்கு 20 மைல் வீதம் ஒருவன் நடப்பானுனல் இப்பூமியைச் சுற்றிவர $3\frac{1}{2}$ வருஷ காலஞ் செல்லும். இப்போது இன்னும் குறைவான காலத்திலேயே புகைக் கப்பல், புகை வண்டிகளின் உதவியால் பூமியைச் சுற்றி வரலாம்.

பூமியில் கால்பங்கு நிலமும், முக்காற்பங்கு ஜலமுமாக இருக்கிறது.

பூமியின்கண் உப்புநீருள்ள ஜலபாகத்துக்கு மஹா சமுத்திர மென்று பெயர்.

இது வெவ்வேறு இடங்களில் வேறு வேறு பெயருடையது. இவ்வித மகா சமுத்திரங்கள் 5. அவை: உத்தர மகாசமுத்திரம், தக்ஷிண மகாசமுத்திரம், பசிபிக் மகாசமுத்திரம், இந்து மகாசமுத்திரம், அத்லாண்டிக் மகாசமுத்திரம் என்பவைகளே.

சமுத்திரத்தைவிடச் சற்றுச் சிறிதாயிருக்கும் ஜல பாகத்திற்கு கடல் என்று பெயர்.

ஏறக்குறைய நிலஞ் சூழ்ந்து கடலைவிடச் சிறிதாயிருக்கும் உப்புநீர் பாகத்திற்கு வளைகுடா வென்று பெயர். (உ-ம்) பாரசீகவளைகுடா.

விரிந்த வாயை யுடையதாய்ப் பூமிக்குள் பிரவே சிக்கும் கடல் பாகத்திற்கு விரிகுடாவென்றும் பெயர். (உ-ம்) வங்காள விரிகுடா. விரிகுடாவிற்கும் வளை குடாவிற்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில், விரி குடா பூமிக்குள் பிரவேசிக்கையில் வாய் அகன்றும், பின் செல்லச்செல்ல குறுகியும் வரும். வளைகுடா பூமிக் குள் பிரவேசிக்கையில் வாய் குறுகியும், அதற்குள் போகப்போக விரிந்து மிருக்கும்.

இரண்டு பெரிய ஜல பாகங்களை ஒன்றாய்ச் சேர்த்து இரண்டு பூபாகங்களைப் பிரிக்கும் ஓர் குறுகிய உப்புநீர்ப் பாகத்திற்கு ஜலசந்தி யென்று பெயர். (உ-ம்) பாக்ஸ் ஜலசந்தி.

பூமியிலுள்ள சுத்தநீர் ஒரே யிடத்தில் தங்கியும், அப்படிக்கின்றி பல விடங்களில ஓடிக்கொண்டு மிருக்கி றது. அப்படி ஓடுபவைகளுக்கு நதிகளென்று பெயர். ஒரே யிடத்தில் தங்கி யிருப்பவைகளுக்கு ஏரிகளென் றும், குளங்களென்றும் அவற்றின் உருவத்திற்கு தக்க வாறு சொல்லப்படும்.

நதி ஆரம்பிக்கும் இடத்திற்கு உற்பத்தி ஸ்தானம் என்றும், சமுத்திர சங்கமமாகு மிடத்திற்கு முகத்து வாரம் என்றும் பெயர்.

பெரிய நதியில் வந்து கலக்கும் நீர்ப்பிரிவுக்கு உப நதியென்றும், பெரிய நதிகளி லிருந்து பிரிந்து வேறு காலாகிச் சமுத்திரத்தில் பாய்வது கிளைநதி யென்றும் பெயர்.

நாலு பக்கமும் தரை சூழ்ந்து பூமியில் தங்கியிருக் கும் ஓர் பெரிய ஜலபாகத்திற்கு ஏரியென்று பெயர்.

கப்பல் அபாயமின்றித் தாங்கத்தக்க கடற்கரைக்குத் துறைமுகம் என்று பெயர்.

பூமியின் மேற்புறம் அதன் உருவத்திற்கும் அமைப்புக்கும் தக்கவாறு வெவ்வே றிடத்தில் வெவ்வேறு பெயருடையதா யிருக்கும். அது கண்டம், தீவு, தேசம், தீபகற்பம், பூசந்தி, முனை, மலை, பீடபூமி, குன்று, பள்ளத்தாக்கு எனப் பலவாறாகப் பெயருடையதா யிருக்கிறது.

அநேக தேசங்களுள்ள பெரிய பூபாகத்திற்குக் கண்டமென்று பெயர். அப்படி 5 கண்டங்கள் உண்டு. அவை ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா வென்பவைகளே. இவற்றுள் நாம் வசிக்கும் கண்டம் ஆசியா.

நான்கு பக்கத்திலும் நீர் சூழ்ந்த நிலப்பாகத்திற்கு தீவு என்று பெயர். சமுத்திரத்தி லுள்ள மலைகளின் உச்சிகளே தீவுகளாம். நாம் அடிக்கடி கேள்விப்படும் இலங்கை, அல்லது சிம்மளம் ஒரு தீவுதான்.

கண்டத்தின் பெரும் பாகங்களுக்குத் தேசங்கள் என்றுபெயர். நாமிருக்கும் ஆசியா கண்டத்தில் அநேக தேசங்க ளிருக்கின்றன. அந்தந்தத் தேசங்களில் வசிப்பவர்களை, அந்தந்தத்தேசத்தார்களென்று சொல்வார்கள். நமக்கு இந்துக்களென்று பெயர் வந்ததற்குக் காரணம் என்னவெனில் ஆசியா கண்டத்தின் தென்பாகத்திலுள்ள இந்தியாவில் வசிப்பதனால்தான். (இவ்வாறே அராபியாவி லுள்ளவர்களை அராபியர்களென்றும், சீனாவிலுள்ளவர்களைச் சீனர்களென்றும், மங்கோலியாவிலுள்ளவர்களை மங்கோலியரென்றும் சொல்வார்கள்.)

கொஞ்சங் குறைய முழுமையும் நீரினுல் சூழப் பட்ட நிலத்திற்குத் 'தீபகல்பம்' என்று பெயர்.

இரண்டு பெரிய பூபாகங்களை ஒன்ருய்ச் சேர்க்கும் குறுகிய நிலப்பாகத்திற்குப் 'பூசந்தி' என்று பெயர்.

அடி யகன்று முன்பாகம் நீரில் செல்லச் செல்லக் குறுகிச் சமுத்திரத்தில் பிரவேசிக்கிற பூபாகத்திற்கு முனை யென்றுபெயர். (உ-ம்) கன்னியாகுமரி முனை.

சாதாரண தரை மட்டத்திற்கு மேற்பட்டு ஓங்கி வளர்ந்த பெரிய பூபாகத்திற்கு மலையென்று பெயர். அடிவாரத்தில் சம்பந்த முள்ள அநேக மலைகளுக்கு 'மலைத்தொடர்ச்சி' என்று பெயர். சாதாரணமாய் மலைகள் 1,000 முதல் 3,000 அடி வரையில் உயர முள்ளவை. சிலமலைகள் இன்னும் அதிக உயரமாயிருப்பது முண்டு. உலகத்திலுள்ள மலைகளில் 'இமயமலை' இந்து தேசத்தின் வடக்கி லுள்ளது. அதன் உயரம் சராசரி 20,000 அடி.

மலையின் உச்சிக்குச் சிகரம் என்றும், அதின் அடிப் பாகத்திற்கு அடிவாரம் என்றும் பெயர்.

மலையிலும் சற்றுக் குறைவான உயரமுள்ள மேட்டு நிலத்திற்குக் 'குன்று' என்று பெயர்.

சாதாரணமாய்க் குன்றுகள் 1,000 அடிக்கு மேற் பட்டிரா.

தணற்கற்களையும், நெருப்பு, புகை, சாம்பல் முதலியவைகளையும் ஆகாய மார்க்கமாய் நாலா பக்கத்திலும் கக்கும் மலைக்கு 'எரிமலை' என்று பெயர்.

நீர்மட்டத்திற்கு அதிகமேற்படாமல் சமமா யிருக்கிற பூபாகத்திற்குச் 'சமநிலம்' என்று பெயர்.

தாழ்ந்த பூபாகத்திற்குப் 'பள்ளத்தாக்கு' என்று பெயர்.

## சித்தூர் அல்லது வடஆற்காடு ஜில்லா.

புகழ்பெற் றோங்கும் மஹாராஜாத்தி யவர்களுடைய ஆளுகைக் குட்பட்ட இந்து தேசமானது சென்னை, பங்காளா, பம்பாய் என மூன்று பிரதான இராஜதானிகளாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது.

அவைகளில் சென்னை இராஜதானியானது 22 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது.

வங்காளக் குடாக்கட லோரமாக வடக்கில் கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணை; கிழக்கில் நெல்லூர், சென்னப்பட்டணம், செங்கற்பட்டு, தென்ஆற்காடு; தெற்கில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி; அராபிக்கடலோரமாக மலையாளம், தென் கன்னடம்; மத்தியில் பல்லாரி அனந்தபுரம், கடப்பை, கர்நூல், வடஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஜில்லா.

(இவைகளில் நாம் வாசஞ் செய்வது சித்தூர் அல்லது வடஆற்காடு ஜில்லா.)

வடஆற்காடு ஜில்லாவுக்கு எல்லைகளாவன:— வடக்கே கடப்பை, நெல்லூர் ஜில்லாக்கள்; கிழக்கே சென்னப்பட்டணம், செங்கற்பட்டு ஜில்லாக்கள்; தெற்கே சேலம், தென்னாற்காடு ஜில்லாக்கள்; மேற்கே மைசூர் ராஜ்யம்.

பூர்வத்தில் இத்தேசம் காடு அடர்ந்ததென்றும், அதில் ஆறு இருஷிகள் தவஞ் செய்தனரென்றும், அத

ஓல் தமிழில் 'ஆறுகாடு' என்றும், சமஸ்கிருதத்தில் 'ஷடாரண்யம்' என்றும் சொல்லியிருக்கிறது.

பரப்பு :—7,200 சதுரமயில்.

மலைகள் :— ஜவ்வாது மலைகள், போளூர், வேலூர் தாலூக்காக்களி லிருக்கின்றன.

நகரிமலை :— கார்வேட்டி நகரம் ஜமீன்தாரியி லிருக்கிறது. இதிலுள்ள சம்பிரம்பாக்க துருக்கம் 2,600 அடி உயரமுள்ளது.

மூக்குமலை அல்லது கோணமலை, கப்பற்காரர் களுக்கு ஓர் அடையாளமாக விருக்கிறது.

திருப்பதிமலை :— இவ்விடத்தில் சந்தனக் கற் கள் அதிகமாய்க் கிடைக்கும்.

| கணவாய்கள். | இருக்குமிடம். |
|---|---|
| கல்லூர்க்கணவாய் | சந்திரகிரிதாலூக்காவில் |
| மூகலிக்கணவாய் | சித்தூர் தாலூக்காவில் |
| சைநகுண்ட | குடியாத்தம் தாலூக்காவில் |
| நாய்க்கனேரி | பலமனேரி தாலூக்காவில் |

காடுகள் :—இச்சில்லாவில் இருக்கும் காடுகள் மிகவும் விஸ்தாரமானவை. அவைகளில் வளரும் மரங் கள் அதிகமாய் ரயில்வேக்காரர் உபயோகத்திற்காக வெட்டப்படுகின்றன. துரிஞ்சி, சந்தனமரம், தேக்கு மரம், கருங்காலி, ஏபி, அளிஞ்சி மரங்களும் உண்டு.

நதிகள் :—பாலாறு, பெண்ணையாறு, செய்யாறு, சுவர்ணமுகி, கமண்டலநாகநதி, கௌண்டிஞ்சியநதி.

இந்த ஜில்லாவில் முக்கியமான நதி பாலாறு.— இது மைசூர் ராஜ்யத்திலுள்ள நந்தி துருக்கத்தில் உற்

பத்தியாகி, 50 மயில் தூரம் மைசூர் ராஜ்யத்தில் ஓடி, பிறகு தென்மேற்கு மூலையிலுள்ள கங்குந்தி வழியாய் இச்சில்லாவுக்குள் பிரவேசித்து, ஆற்காட்டண்டை அரைமைல் உள்ள ஆருகி, செங்கற்பட்டு ஜில்லாவழியாக ஓடி, சதுரங்கப் பட்டணத்துக்குத் தெற்கே வங்காளக் குடாக்கடலில் சங்கமமாகும். இதன் நீளம் 230 மைல். இதில் கலக்கும் உபநதிகளில் முக்கியமானவை பெண்ணையாறு, செய்யாறு, கௌண்டிஞ்சிய நதி. இந்நதியின் கரையின்மீதுள்ள பட்டணங்கள்:—ஆம்பூர், பள்ளிகொண்டை, விரிஞ்சீபுரம், வேலூர், இராணிப்பேட்டை, ஆற்காடு.

பெண்ணையாறு:—சந்திரகிரி தாலூக்காவுக்குமேற்கே உற்பத்தியாகி, தெற்குமுகமாகப் பாய்ந்து சித்தூர் தாலூக்காவில் சென்று திருவலத்துக் கருகில்போய், தெங்காலுக்குச் சமீபத்தில் பாலாற்றுடன் சேருகிறது.

செய்யாறு:—ஜவ்வாதுமலைகளில் உற்பத்தியாகிவடகிழக்கு முகமாக ஆற்காடு, வந்தவாசி தாலூக்காக்களுக் கிடையில் ஓடி, செங்கற்பட்டு ஜில்லாவுக்குள் பிரவேசித்து, 'வாலாஜாபாத்' என்னு மிடத்தில் பாலாற்றுடன் கலக்கிறது.

சுவர்ணமுகி:—சந்திரகிரி தாலூக்காவில் உற்பத்தியாகிச் சந்திரகிரி, காளாஸ்திரியில் பாய்ந்து கிழக்குமுகமாய் ஓடி, பழவேற்காட்டுக்குச் சமீபத்தில் நெல்லூர்ஜில்லா மார்க்கமாகச் சமுத்திர சங்கமமாகிறது.

கமண்டலநாகநதி:—படவேட்டுக்காட்டில் உற்பத்தியாகிய 'கமண்டலநதி'யும் கண்ணமங்கலத்துக்கு மேற்கே வேலகிரிமலையில் உற்பத்தியாகிய 'நாகநதி'யும் சம்பரா நல்லூருக்கருகில் ஒன்றாய்க்கூடிக் 'கமண்டல

நாகநதி' என்றுய்க் காமக்கூர், ஆரணி நகரம் இவைக ளில் ஓடி வாழப்பந்தலுக் கருகில் செய்யாற்றுடன் கலக்கிறது.

கௌண்டிஞ்சிய நதி:— புங்கனூர் ஜமீன்தாரியி லுள்ள குண்டுக்கல்லுக்கு மேற்கே உற்பத்தியாகி அவ்வேரியின் கலுங்கல் வழியாக வெளிப்பட்டுப் பலவ னேரி, குடியாத்தம் இவைகளுக் கருகில் ஓடி, சித்தாத் தூருக் கருகில் பாலாற்றுடன் சேருகிறது.

நாராயணவனம் "நகரி" என்னும் நதிகள் நகரிமலை யில் தோன்றிக் கிழக்கு முகமாய் ஓடி, செங்கற்பட்டு ஜில்லா வழியாகக் கடலில் கலக்கின்றன.

அணைக்கட்டுகள்:—பாலாறு, பெண்ணை, செய் யாறு இந்நதிகளில் அணைக்கட்டுகள் கட்டி, அவைக ளின் ஜலத்தைப் பாய்ச்சலுக்காக ஏரிகளுக்குத் திருப்பி யிருக்கிறார்கள்.

ஏரிகள்:—காவேரிப்பாக்கம், மாமண்டூர் ஏரிகள் முக்கியமானவை.

காவேரிப்பாக்கம் ஏரி:—வாலாஜா தாலூக்காவி லிருக்கிறது. இது 10 மயில் சுற்றளவுள்ள ஒரு பெரிய ஏரி. இவ்வேரியின் ஜலம் 32 கிராமங்களுக்குப் பாய்ந்து செழிப்பை யுண்டாக்குகிறது. பாலாற்றில் புதுப்பாடிக் குச் சமீபத்தில் கட்டப்பட் டிருக்கும் அணைக்கட்டில் ஜலம் வந்து நிரப்புகிறது.

சீதோஷ்ணஸ்திதி:— எல்லாம் பார்க்குமளவில் இதைச் சவுக்கியம் தரத்தக்க 'பூமி' என்றே சொல்ல லாம். ஆனால் கங்குந்தி, பலனேரி, புங்கனூர் இவைகள்

குளிர் நாடாகவும் (ஜ்வர) சுரரோகத்தை உண்டாக்கும் பூமிகளாகவும் இருக்கின்றன.

விளைபொருள்கள்:—நெல், கம்பு, சோளம், கேழ் வரகு, வரகு முதலிய தானியங்கள் பயிராகின்றன. அவுரி, கரும்பு; எண்ணெய் வித்து, கொள்ளு முதலியவைகளும் உண்டாகின்றன. காடுகளில் தேன், மெழுகு, ஆவாரம்பட்டை இவைகளும் அகப்படும்.

கைத்தொழில்கள்:—இச்சில்லா முழுமையும் வஸ்திரம் நெய்கிறார்கள். வந்தவாசியில் நேர்த்தியான கோரைப்பாய் நெய்கிறார்கள். காளாஸ்திரியில் கண்ணாடி மணிகளும், வளையல்களும், திருப்பதியில் பொம்மைகளும், வாலாஜாப் பேட்டையில் ஜமுக்காளமும், புங்கனூர் பிரதேசத்தில் குரும்பர்களால் கம்பளிகளும், குடியாத்தம், சத்துவாசாரி, திருவத்தூர் இவைகளில் சாயசேலைகளும், திருப்பதி, வேலூர் என்னுமிடங்களில் பித்தளைப் பாத்திரங்களும் செய்கிறார்கள்.

ஜனங்கள்:—இந்த ஜில்லாவில் இந்துக்களும், மகமதியரும், ஜைனர்களும், கிறிஸ்தவர்களும், மற்றஜாதியாரும் சேர்ந்து 21,80,000 ஜனங்கள் வசிக்கிறார்கள்.

பாஷைகள்:—முக்கியமான பாஷைகள் தமிழும், தெலுங்கும். பொதுவாய்ப் பாலாற்றின் வடக்கே யுள்ளவர்கள் தெலுங்கும், தெற்கே யுள்ளவர்கள் தமிழும் பேசுகிறார்கள். அங்கங்கேயுள்ள துருக்கர்கள், ஹிந்துஸ்தானி பாஷை பேசுகிறார்கள். ஆங்கிலேய பாஷை வருஷா வருஷம் பெருகி ஜில்லா முழுவதும் வியாபிக்கின்றது.

## இருப்புப்பாதை.

இவ்வருமையான விஷயத்தை 100 வருஷங்களுக்கு முன்புதான் ஆங்கிலேயர் கண்டு பிடித்தார்கள். முதல்முதல் இங்கிலாந்து தேசத்தில் ஏற்பட்டது. ஒரு மனிதன் 10, 12 அணாவைக் கொண்டு 4, 5 மணி நேரத்தில் 60 மயில் தூரம் பிரயாணம் செய்யலாம். மற்றெந்த ஜில்லாவைப் பார்க்கிலும் இந்த ஜில்லாவில் இருப்புப் பாதை அதிகம். இச்சில்லாவில் இப்போது 300 மைல் நீளமுள்ள இருப்புப்பாதைகளேற்பட்டிருக்கின்றன.

இரண்டு, மூன்று இருப்புப் பாதைகள் ஒன்றாய்க் கூடு மிடத்திற்கு "ஜங்ஷன்" அல்லது "சேர்க்கை" யென்று பெயர். இந்த ஜில்லாவில் கிழக்கே அரக்கோணம், மத்தியில் காட்பாடி, வடகிழக்கில் ரேணுகுண்டா, வடமேற்கில் பாகாலா ஆக 4 சேர்க்கைகளிருக்கின்றன.

இச்சில்லாவில் சென்னையிலிருந்து பெங்களூருக்குப் போகும் பாதையிலுள்ள ரெயில்வே ஸ்டேஷன்கள் :—அரக்கோணம், மின்னல், சோளங்கிபுரம், தலங்கை, ஆற்காடு, பெண்ணை, திருவலம், காட்பாடி, லத்தேரி, விரிஞ்சிபுரம், குடியாத்தம், உள்ளி, மேற்பட்டி, ஆம்பூர், விண்ணமங்கலம், குப்பம். கடப்பைக்குப் போகும் வழியி லுள்ளவை:—திருத்தணி, நகரி, புத்தூர், பூடி, ரேணுகுண்டா.

இச்சில்லாவில் தென்னிந்தியா ரெயில்வே ஸ்டேஷன்களவையென்றால், போளூர், களம்பூர், கண்ணமங்கலம், கணியம்பாடி, வேலூர், காட்பாடி, ராமாபுரம், சித்தூர், தல்பட்டு, பாகால், பனப்பாக்கம், சந்திரகிரி,

திருப்பதி, ரேணுகுண்டா, ஏற்பேடு, காளாஸ்திரி, எல்லகூர்.

பாகாலிலிருந்து குந்தக்கல் போகப்பட்ட பாதையிலுள்ள ஸ்டேஷன்கள்: தாமல்செருவு, மங்களம்பேட, புலிசர்லா.

வர்த்தகம்:—ஏற்றுமதி:—நெல், வெல்லம், நீலி, ஆமணக்கு, கொள், அரிசி.

இறக்குமதி:—உப்பு, இரும்பு, வஸ்திரங்கள் பாக்கு, சீமை நூல்கட்டுகள்.

வேலூர், ஆற்காடு, குடியாத்தம், வாலாஜா, ஆரணி முக்கிய வர்த்தக ஸ்தானங்கள்.

பிரிவுகள்:—இந்த ஜில்லாவானது 9 தாலூக்காக்களும், 5 சமஸ்தானங்களுமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

9 தாலூக்காக்கள்:—சித்தூர், பலவனேரி, குடியாத்தம், வேலூர், போளூர், வந்தவாசி, ஆற்காடு, வாலாஜா, சந்திரகிரி.

5 சமஸ்தானங்கள்:—காளாஸ்திரி, கார்வேட்டிநகரம், ஆரணிநகரம், கங்குந்தி, புங்கனூர்.

பாளையப்பட்டுகள்:—பங்காருபாளையம், நாரகண்டிபாளையம், குடிபாடிபாளையம், தும்பபாளையம் இவை சித்தூர் தாலூக்காவி லிருக்கின்றன.

கரகம்பாடிபாளையம், கிருஷ்ணபாளையம், கல்லூர் பாளையம், புலிசர்லபாளையம் இவை சந்திரகிரி தாலூக்காவி லிருக்கின்றன.

இந்த ஜில்லாவிலுள்ள முனிசிபல் பட்டணங்கள் 4:—அவை வேலூர், வாலாஜா, திருப்பதி, குடியாத்தம்.

## சித்தூர் தாலூக்கா.

சித்தூர்:—'பெண்ணை' ஆற்றின் கரையிலுள்ள 'சித்தூர்' இச்சில்லாவில் முக்கியபட்டணம். இவ்விடத்திற்றான் கலெக்டர் ஜட்ஜி முதலிய ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் வசிக்கிறார்கள். இதில் 'ஹை ஸ்கூல்' இருக்கிறது. இதிலுள்ள ஆஞ்சனேய ஸ்வாமி முக்கியமானது.

மேல்பாடி:—சிவஸ்தல மிருக்கிறது.

வள்ளிமலை:—இதில் சுப்பிரமணியர் ஆலய மிருக்கிறது.

## பலவனேரி தாலூக்கா.

பலவனேரி:—முக்கிய பட்டணம். இதில் சாராயம் காய்ச்சும் பெரிய இட மிருக்கிறது.

வெங்கடகிரி கோட்டை:—முன்னாளில் இது ஒரு பெரிய பட்டணம். இதில் டிப்டி தாசில்தார் கச்சேரி யிருக்கிறது,

## குடியாத்தம் தாலூக்கா.

குடியாத்தம்:—முனிசிபல் பட்டணம். இதில் செவ்வாய்க்கிழமை தோறும் 'சந்தை' கூடும். அதில் மாடுகள் விசேஷமாக வரும்.

போரணம்பட்டு:—இப்பெரிய ஊரில் லப்பைகள் விசேஷம்; இது வர்த்தக ஸ்தானம்.

சாத்துக்குடி:—மாம்பழத்துக்காகவும் கிச்சிலிப் பழத்துக்காகவும் பேர்போனது.

திருவலம்:—இதில் ஒரு சிவஸ்தல மிருக்கிறது.

துத்திப்பட்டு:—இதில் ஒரு விஷ்ணு ஸ்தல மிருக்கிறது.

## வேலூர் தாலூக்கா,

வேலூர்:—ஜில்லாவில் பெரிய பட்டணம். இதில் சப் கலெக்டர் கச்சேரியும் டிஸ்திரிக்டு முனிசிப்பு கோர்ட்டும், அமெரிக்கன் மிஷன் 'ஹைஸ்கூலும்' இருக்கின்றன. இதில் ஒரு கோட்டையுண்டு. இக்கோட்டையிலுள்ள தேவாலயத்தில் ஒரு மண்டபம் நாகரீகமாய்க் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்கிறது.

ஆம்பூர்:—இதில் ஸ்டேஷனெரி சப் மாஜிஸ்திரேட்டு கச்சேரி யிருக்கிறது. சீனித்தோட்டம் விசேஷம். இவைகளின் பழம் அதிக இனிப்புள்ளது. இதில் லப்பைகள் விசேஷமாயும் தனவந்தர்களாயு மிருக்கிறார்கள். இதில் சிவாலயமு மிருக்கிறது.

பள்ளிகொண்டை:—பெரிய விஷ்ணுஸ்தலம்.

விரிஞ்சிபுரம்:—பெரிய சிவஸ்தலம். கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமையில் விசேஷ ஜனங்கள் வருவார்கள். இதிலுள்ள சிம்ம குளத்தில், அன்றையதினம் ஸ்நானம்செய்தால் பேய், பிசாசுகள் பறந்து ஓடிப்போகுமென்றும் சந்தானம் இல்லாதவர்களுக்குப் புத்திரபாக்கியம் உண்டாகுமென்றும் சொல்லுகிறார்கள். நாட்டுக்கோட்டைச் செட்டிகளி லொருவராகிய மே. லே. மே. வைரவன் செட்டியார் இச்சிவஸ்தலத்திற்குத் தர்ம

கர்த்தராக வேற்பட்டு, உற்சவாதிகளை அதிக சிறப்பாக நடத்தி வருகிறூர்.

## போளூர் தாலூக்கா.

போளூர்:—இதில் தாசீல்தார், ஸ்டேஷனெரி, சப் மாஜிஸ்திரேட்டு கச்சேரி யிருக்கிறது.

படவேடு:—இது அம்மன் கோவிலால் பிரசித்த மானது. ஆடிமீ வெள்ளிக் கிழமை தோறும் விசேஷ ஜனங்கள் பிரார்த்தனை செலுத்த வருவார்கள்.

## வந்தவாசி தாலூக்கா.

வந்தவாசி:—முக்கியபட்டணம். இதில் ஓர் பழைய கோட்டை யிருக்கிறது. இதில் கோரைப்பாய் நயமாயும் விசேஷமாயும் அகப்படும். தேசூர், தெள்ளார், அனக்கா வூர் இவைகள் குடிவளமுள்ள வூர்கள்.

## ஆற்காடு தாலூக்கா.

ஆற்காடு:—கர்நாடக நபாபுகளுக்கு இராஜதானி யாக யிருந்தது. திருவத்தூர், கலவை, வாழைப்பந்தல் இவைகளில் சிவஸ்தலங்க ளிருக்கின்றன.

திமிரி:—இதில் செங்குந்தர் விசேஷம்.

மேல்விஷாரம்:—இதில் லப்பைகள் விசேஷம்.

## வாலாஜா தாலூக்கா.

வாலாஜா:—ஆற்காடு நவாபான 'வாலாஜா' என் பவரால் கட்டப்பட்டதினுல், வாலாஜா நகர் என்று பேர் பெற்றது.

இராணிப்பேட்டை:—இதில் ஹெட் அசிஸ்டண்ட் கலெக்டர் கச்சேரி யிருக்கிறது. இதில் சாராயம் காய்ச்

சும் பெரிய விடமிருக்கிறது. அதில் வெள்ளிக்கிழமை தோறும் சந்தை கூடும். அதில் மாடுகள் விசேஷமாக வரும்.

சோளங்கிபுரம்:—டிஸ்திரிக்ட்டு முன்சீப்பு கோர்ட்டு இருக்குமிடம். இதில் பெரியமலை, சின்னமலை யென்று இரண்டு மலைகளுண்டு. பெரியமலையில் நரசிம்ம சுவாமி கோவிலும், சின்னமலையில் சஞ்சீவிராயர் கோவிலு மிருக்கின்றன. பெரியமலைக்கு வெள்ளிக்கிழமையும், சின்னமலைக்கு ஆதிவாரமும் விசேஷித்ததின மாதலால் அக்கிழமைகளில் விசேஷ ஜனங்கள் வருவார்கள்.

அரக்கோணம்:—இதில் டிப்டி தாசீல்தார் கச்சேரியிருக்கிறது. பெருத்த 'ஜங்ஷன்' ஸ்டேஷன்.

## சந்திரகிரி தாலூக்கா.

சந்திரகிரி:—இது முற்காலத்தில் இந்து ராஜாங்கத்துக்கு இராஜதானியாக விருந்தது. இதை ஆண்டுகொண்டிருந்த, இந்து அரசரி லொருவர்தான் முதல் முதல் ஆங்கிலேயருக்குச் சென்னபட்டணத்தில் குடியிருக்கும்படி அனுமதி கொடுத்தார்.

திருப்பதி:—இது முனிசிபல் பட்டணம். மகா பிரபலமான விஷ்ணு தேவாலய மிருக்கிறது. இந்தியாவின் நான்கு பக்கத்து ஜனங்களும் விசேஷமாக பிரார்த்தனை செலுத்த வருகிறார்கள்.

திருச்சானூர்:—இதையே அலமேலு மங்காபுரம் என்று சொல்வார்கள். தாயார் சந்நிதியால் பெயர் போனது.

ரேணுகுண்டா, பாகால இவை ஜங்ஷன் ஸ்டேஷன்கள்.

## சமஸ்தானங்கள்.

காளாஸ்திரி:—மகா பிரபலமான சிவஸ்தலம். வருஷந்தோறும், சிவராத்திரி யன்றைக்கு விசேஷ ஜனங்கள் சேருவார்கள். ஜமீன்தார் இருப்பிடம்.

மாதர்பாக்கம்:—உருமாலை குட்டைக்காகப் பேர் போனது.

கார்வேட்டிநகரம்:—திருத்தணி. இதில் மகா பிரபலமான சுப்பிரமணிய சுவாமி தேவாலயம் மலைமேலிருக்கிறது. கிருத்திகைதோறும் விசேஷஜனங்கள் பிரார்த்தனை செலுத்த வருவார்கள்.

திருவாலங்காடு:—பிரபலமான சிவஸ்தலம்.

ஆரணி:—இதில் டிப்டி கலெக்டர் கச்சேரியும், டிஸ்டிரிக்டு முன்சீப்பு கோர்ட்டு மிருக்கிறது. இடிந்த பழைய கோட்டை ஒன்றுண்டு.

சத்திய விஜயநகரம்:—ஆரணிக்கு 2 மயில் தூரத்தில் கமண்டலநாகநதியின் மீது இருக்கிறது. ஜமீன்தார் மாளிகை யிருக்கிறது.

கங்குந்தி:—ஜமீன்தாரி வாசஸ்தானம். சுவர கோய்க்குப் பிறப்பிடம்.

ரான்னபுதுகூர்:—மைசூர் எருதுகள் சந்தைகூடும்.

புங்கனூர்:—ஜமீன்தார் வாசஸ்தானம். பலபொருட்காட்சிச்சாலை (மியூசியம்) ஒன்றுண்டு.

கீலம்பட்ளா:—இதில் ஒரு பெரிய ஆலவிருக்ஷம் அரை காணி விஸ்தீரண முள்ளதா யிருக்கிறது.

முற்றிற்று.